JAYANKONDAR'S

# KALINGATHU PARANI

A RÉSUMÉ IN PROSE

T. CHELVAKESAVAROYA MUDALIAR M.A

# கலிங்கத்துப் பரணி

கதாசங்கிரகம்

2-8-8-15

சயங்கொண்டார்

# கலிங்கத்துப் பரணி

---

கதாசங்கிரகம்

தி. செல்வக்கேசவராய முதலியார்
பச்சையப்பன் கலாசாலை

கி. க. அ. சங்கத்தார் அச்சுக்கூடம்:
வேப்பேரி, சென்னை
1915

# PREFACE.

JAYANKONDAR'S 'Kalingathu Parani' is a unique poetical romance recounting the conquest of the Kalinga country by Karunakara Thondaiman, the prime minister and commander-in-chief of Kulothunga Chola I. This résumé in prose was written in 1896-97, as desired by the late Dewan Bahadur V. Krishnamachariar, and appeared in *The Maharani* (Vol. VII).

# கலிங்கத்துப் பரணி:

## கதாசங்கிரகம்

### முன்னுரை

தமிழர்களுடைய பழைய சரித்திரமும் தென்னாட்டு மூவேந்தர்களுடைய வரலாறும் இன்னும் எவர்களாலும் அவிழ்க்கமுடியாத முடிகளாகவே இருக்கின்றன. இம்முடிகளைச் சிக்கற அவிழ்க்கத் துணிவது கல்லில் நார் உரிப்பதேயாகும். புராணங்களுக்கும் இதிகாசங்களுக்கும் முற்பட்ட மூவேந்தர்கள் சரித்தை இனி எந்த ஆதாரவுகளைக்கொண்டு என்னென வரையறுப்போம்? அசோக மகாராசன் காலம்முதல் சிலாசாதனங்கள் அங்கங்கே தலைகாட்டத் தொடங்கின. பழமையான தமிழிலக்கியங்களில் இறந்துபோயின போக, எஞ்சி நின்றனவற்றில் சிற்சில இலக்கியங்கள் மாத்திரமே சிற்சில அரசருடைய தலைகால் தெரியவும் தமிழர்களுடைய மாபை அறிய

வும் வாயிலா யிராநின்றன. யாழ்ப்பாணம் சி. வை. தாமோதரம் பிள்ளையவர்களும் மஹா மஹோபாத்தியாயர். வே. சாமிநாதையரவர்களும் இவைகளில் சிலவற்றை அச்சிட்ட வளவில், இந்திய சரித்திர வாசிரியர்களும் சிலா சாதன விற்பனர்களும் ஊக்கங்கொண்டு, பல சரித்திரக் கூறுகளை நுனித்தறியவும், முன்னே ஐயநிகழ்ச்சியா யிருந்தவைகளைத் துணிந்து கொள்ளவும் வழியுண்டாயிற்று. சில புறநாட்டிலக்கியங்களும் சிலாசாதனங்களும் தமிழ் நாட்டின் பிற்காலச் சரிதத்தை ஒரோவோர் கூறு அறிதற்கு ஆதாரவாயிருக்கின்றன. இங்ஙனம் அங்குமிங்கும் சிதறிக்கிடக்கும் சில சாதனங்களைக் கொண்டு, தமிழ்நாட்டில் சென்ற இரண்டாயிரம் வருஷகாலத்தில் நிகழ்நத சரித்திரத்தை இப்போது பல புலவர்கள் ஒருவாறு தொகுத்துவருகின்றனர். இங்ஙனம் தொகுப்பதற்கு ஏதுவான இலக்கியங்களில் **கலிங்கத்துப் பரணி** என்கிற பிரபந்தமும் ஒன்றாதலால் அதன் கதாசங்கிரகத்தைக் கத்தியபாகமாகக் கூறலுற்றோம்.

கலிங்கநாட்டில் பெற்ற வெற்றித்திறத்தைக் கூறுவதாகலின், இநதப் பிரபந்தம கலிங்கத்

துப் பரணி எனப் பெயர்பெற்றது. **கலிங்க** மானது, இப்போது வடஸர்க்கார் **என்னும்** பிரதேசத்தில் கோதாவரி நதிக்கு அப்பாற் பட்டது. தற்காலத்தும் விசாகப்பட்டணத் துக் கருகில் உள்ளதோர் நகரம் கலிங்கப்பட் டணம் என வழங்குவது இதனை நன்கு வலி புறுத்தும். கலிங்கராசனை வெற்றிகொள்ளுமாறு செல்லும் சோழனுடைய படையானது சில ஆறுகளைக் கடந்து செல்வதாக இந்நூலில் கூறியிருக்கின்ற வர்ணனையினாலும் இதனை உணர்தலாகும். பண்டைநாளின் இந்திய ராச் சியங்களை வரையறுத்துக் காட்டும் பூகோள படங்களாலும் இதனை உணர்தலாகும்.

**ப**ரணியாவது தமிழில் வழங்கும் தொண் ணூற்றாறு பிரபந்த வகைகளில் ஒன்று. அது— "போர்முகத்தாயிரம் களிற்றியானை நிரையைக் கொன்ற வீரனைத் தலைமகனாகக்கொண்டு, கட வுள் வாழ்த்தும், கடைதிறப்பும், பாலைநிலமும், காளிகோயிலும், பேய்களோடு காளியும் காளி யோடு பேய்களுஞ் சொல்லத் தான் சொல்லக் கருதிய தலைவன் கீர்த்தி விளங்கலும், அவன் வழியாகப் புறப்பொருள் தோன்ற வெம்போர் வழங்க விரும்பலும், என்றிவையெல்லாம் இரு

சீரடி முச்சீரடி யொழிந்தொழிந்த மற்றைய வடியாக ஈரடிப் பஃறொழிசையால் பாடுவது." பரணின்மேல் இருந்துகொண்டு களப்போரினைக் கண்டுரைப்பதாகக் கருதப்படுதலின் இது இப்பெயர் பெற்றதென்ப. களப்போரில் வெற்றிகொண்ட அரசனது வெற்றித்திறத்தைச் சிறப்பித்துப் பாடுகின்ற புலவன் அவ்வரசனது வேல் முதலான படைகளால் அமைத்த பரணின்மீ திருந்துகொண்டு இந்தப் பிரபந்தம் பாடுவது மாமென்ப. தொல்காப்பியத்தில் இதற்கிலக்கண மின்மையால், இது பிற்காலத்தில் படைத்துக்கொண்ட ஒருவகைப் பிரபந்தம் போலும். பரணிப் பிரபந்தம் பாடுவது சற்றே கஷ்டசாத்தியமான காரியமென்று கவிவல்லோர் கூறுவர். இதனுற்போலும் ஒரு தனிப் பாடலில் ''பரணிக்கொருநாண் முழுதுமே" என வருவது.

முற்றுருவகமாகப் பிற்றைநாள் கவிகள் பாடிய மாயவதைப் பரணி அஞ்ஞவதைப் பரணி முதலியன போலன்றி, இக்கலிங்கத்துப் பரணி I—வது குலோத்துங்கச் சோழன் தன் மந்திரத் தலைவனை கருணாகரத் தொண்டையனைத் தண்டத்தலைவனாகச் செலுத்திக் கலிங்

கலிங்கத்தை வென்ற திறத்தை உள்ளபடி புனைந்துரையாகக் கூறியதாம். இது சயங்கொண்டார் என்னும் புலவர் பாடியது. "வெண்பாவிற் புகழேந்தி பரணிக்கோ சயங்கொண்டான்" எனப் புகழ்பெற்றவர் இவரே.

இவர் சோழனுடைய வாயில் வித்துவான்களில் தலைவர். தென்னாட்டுப் புலவர் சிலர் போந்து புரிந்த வாதப்போரில் வெற்றியடைந்ததனால் "சயங்கொண்டான்" என்றொரு பட்டப்பெயர் பெற்றிருந்தார். கலிங்கரை வென்ற செய்தியை அறிந்தவுடனே சோழன் இப்புலவரை நோக்கி "யானும் சயங்கொண்டான் ஆயினேன்" என்றான். உடனே இப்புலவர் "அங்ஙனமாயின் சயங்கொண்டான் சயங்கொண்டான்மீது பரணி புனைவான்" என்றுரைத்துப் போய் இந்தப் பிரபந்தத்தை இயற்றிவந்து அரசன் அவையிலே அரங்கேற்றினார். அப்போது அரசன் தனது கருவூலத்தினின்றும் பொற்றேங்காய்களை வருவித்து வைத்துக்கொண்டு ஒவ்வொரு தாழிசையின் முடிவிலும் ஒவ்வொரு காயாக உருட்டித்தந்து சளி கூர்ந்தான். இங்ஙனம் ஒரு கன்னபரம்பரை வழங்கிவருகின்றது. சிலப்பதிகாரம் இந்திர

விழவூரெடுத்த காதையின் உரையில், அடியார்க்கு நல்லார் கலிங்கத்துப் பரணியில் நின்றும் சில தாழிசைகளை எடுத்துக் காட்டியிருக்கின்றனர். இதனால் இந்நூலின் பெருமையும் இவ்வாசிரியர் பெருமையும் நன்கு விளங்கும். மூவருலாவிலும் கண்டறியாத சில செய்திகள், இந்த நூலில் உரைத்திருக்கும் சோழருடைய இராச பாரம்பரியத்தில் குறித்திருக்கின்றன. அவைகளில் ஒன்று கரிகாற்பெருவளத்தானைச் சுட்டியது; ''தழுவு செந்தமிழ்ப் பரிசில் வாணர் பொன் பத்தொடாறுநூ றாயிரம்பெறப் பண்டு பட்டினப்பாலை கொண்டதும்'' என்பது. மற்றொன்று சோழன் செங்கணானைக் கருதியது; ''களவழிக்கவிதை பொய்கையுரைசெய்ய உதியன் கால்வழித்தளையை வெட்டியரசிட்டவனும்'' என்பது. இதனால் இவருடைய பண்டையிலக்கியப் பயிற்சியின் பரப்பு எளிதில் விளங்கும்.

கடைதிறப்பில் சிருங்காரரசமும், இந்திரசாலத்தில் அற்புதரசமும், போரில் வீரரசமும், களம்பாடியதில் ஆசியரசமும் அமைந்திருக்கின்றன. வெற்றியைக் கேட்ட களிப்பின் மிகுதியாலும், அரசன்மீதுள்ள ஆர்வத்தின் மிகுதி

யாலும், இவ்வாசிரியர், நூலின் நடையை மொத்தத்தில் குதிரைப்பாய்ச்சலாகக் கொண்டுசெல்கிறார். நூலின் பகுதிகளுக் கேற்பவும், அவ்வப்பகுதியின் சுவைக் கேற்பவும், நடையானது மல்லகதியும் மயூரகதியும் வானரகதியும் விடபகதியும் வியாக்கிரகதியுமாக வேறுபட்டுச் செல்கின்றது. பின்வருநிலை உவமை தற்குறிப்பேற்றம் தன்மைநவிற்சி என்னும் அணிகள் அங்கங்கே அழகு செய்கின்றன. உலகவழக்கான சில சொற்களையும் தொடர்களையும் இடைப்பெய்தும், இவர் வாக்கானது சொற்கட்டு நெகிழாமல் இருக்கின்றது. வடசொல் வழக்கு அருகியிருப்பதும், இந்த நூலின் சிறப்பியல்புகளில் ஒன்று. இங்ஙனம் பல துறைகளையும் பல ரசங்களையும் பல அணிகளையுங்கொண்டு, செப்படி வித்தையாகவும் காரட வித்தையாகவும், இவ்வாசிரியர் இழுமென்மொழியால் இந்தப் பிரபந்தத்தை இனிது முடித்திருக்கிறார். இந்தப் பிரபந்தம்போல் இரசிக்கும் நூல்கள் தமிழில் மிகச் சிலவே. அவற்றுள்ளும் இதைப்போல் பலவிதத்திலும் ரசிப்பது ஒன்றுதானும் இன்றென்றே துணியலாம்.

I குலோத்துங்கச் சோழன் கி-பி. 1070 முதல் 1118 வரையில் அரசியல் நடத்தினதாகச் சாசனவாசிரியர்கள் தலைக்கட்டியிருக்கின்றனர். அரசுசெய்யத் தொடங்கினது முதல் இருபதாண்டளவில் செய்த சிலாசாசனங்கள் யாதொன்றிலும் கலிங்கத்துவென்றி குறித்திலது. இருபத்தாறும் ஆண்டிலே செய்த சாசனங்களில் கலிங்கதேசத்தை மீண்டும் வென்ற செய்தி குறித்திருக்கின்றது. ஆகவே கலிங்கத்தை முதலில் வென்றது 1090-ம ஆண்டுக்கு இப்பாலாக இருத்தல்வேண்டும். ஆகவே இந்தப பிரபந்தத்தின் காலம் கி-பி. பதினொராவது நூற்றாண்டின் கடைசிகாலமே என்பது துணிவு.

இந்த I குலோத்துங்கச் சோழன் விக்கிரமசோழனுடைய தந்தை. விக்கிரமசோழனுலாவில்

மேவலார்

சேலைத் துரந்து சிலையைக் கடிந்திருகால்
சாலைக களமறுத்த தண்டினான்—மேலைக்
கடல்கொண்டு கொங்கணமுங் கன்னடமும் கைக்கொண
டடலகொண் டமரா டரச—ருடலை
இறகசி வடவரையே எல்லையாய்த தொல்லை
மறக்கலியும் சுங்கமு மாறறி—அறத்திகிரி

வாரித கிரி வலமாக வந்தளிக்கும்
ஆரிற் பொலிதோள் அபயற்குப்—பார்விளங்கத்
தோன்றிய கோன விக்கிரம சோழன்

என வருகின்றது. விக்கிரம சோழன் கி—பி. 1118 முதல் 1132 வரையில் அரசாண்டதாகச் சாசன விற்பனர்கள் முடிவுசெய்திருத்தலால், கலிங்கத்துப் பரணிகொண்டவன் I குலோத்துங்கனே என்பது பெறப்படும். கலிங்கத்துப் பரணியில் அவதாரத்தில்

பொன்னின மாலைமலர் மாலைபணி மாறியுடனே
புவனி காவலாசன தேவியாகள சூழ பிடிவரச்
செனனி யானையுடன ஆனையை நடததுமுரிமைத்
தியாகவல்லிநிறை செலவியுடன மல்கிவரவே

என வருவதும், இவனுடைய மெய்க்கீர்த்தியை உரைக்கும் சிலாசாசன மொன்றில்

கலிஙக மணடலமுங கைப்படுத தருளித
திறல்சொ ளாரமும திருப்புயத தலஙகனும
வீரமுங தியாகமும் விளஙகப பாரதொழச
சிவமனிடர் துமையெனத் தியாகவல்லி
அவனி முழுதுடையாள் உடனிருப்ப

என வருவதும், கலிங்கத்துப் பரணியின் பாட்டுடைத்தலைவன் I குலோத்துங்கனே என்பதை நன்றாக வற்புறுத்துகின்றன. குலோத்துங்கச் சோழனுலா இவனை

தரணி கவர்ந்த தமிழ்வேந்தர் பாடும்
பரணி புனைந்த பகடு

எனக் குறித்திருக்கின்றது.

இந்த I குலோத்துங்கனுனவன் கங்கை கொண்ட சோழனுகிய இராசராசனுடைய பெண்வயிற்றில் பிறந்த பேரன். சோழர்கள் சூரிய வமிசத்தைச் சேர்ந்தவர்கள். இராச ராச சோழனுடைய பெண் சந்திரவமிசத்தில் புகுந்தவள். நெடுநாள் வரையில் இராசரா சனுக்குப் பிள்ளைபபே றின்மையால், அவன் தன் பெண்வயிற்றிற பிறந்த பேரனைச் சுவீ காரப் புத்திரனுகக் கொண்டான். இதனுல் இந்தப் புத்திரன் உபயகுலோத்தமன் என வழங்கப் பெற்ருன். அவனுக்கு அபயன் சய துங்கன் விசயதரன் என மறுநாமங்கள் வழங் குவ துண்டு. இவன் வடக்கிலே திக்குவிசயம் பண்ணிச் சென்று சக்கரக்கோட்டத்தை வென் றிருக்கையில், இராசராச சோழன் பரலோக மடைந்தான். அவ்வளவிலே குலோத்துங்கன் திரும்பிவந்து அரசியல் நடத்தலாயினன். இது பரணியாசிரியர் கூற்று.

சோழமண்டலத்தின் வடமேற் புறத்திற்கு அப்பாற்பட்ட நாடுகளை அரசாட்சி செய்திருந்த

VI விக்கிரமார்க்க ராசனுடைய செயல்களைப் பில்ஹணன் என்னும் புலவர் வடமொழியில் விக்கிரமார்க்கதேவ சரித்திரம் என்னு நூலாக எழுதியிருக்கின்றனர். இதனை அச்சிட்ட டாக்ட்டர் பூலர் என்பவர் தமது பதிப்புரையில் இது கி-பி. 1085-ம் ஆண்டிலே அல்லது சற்று முன்பின்னே எழுதியது எனக் காட்டியிருக்கிறார். இந்தச் சரித்திரத்தால் தெரிகின்ற செய்தியாவது:—அப்போது சோழமண்டலத்துக்கும் விக்கிரமார்க்க ராச்சியத்துக்கும் இடையிலே துங்கபத்திரை நடு வெல்லையாக இருந்தது. கங்கைகொண்டசோழபுரம் (கங்ககுண்ட) என்பது சோழமண்டலத்தின் பிரதான நகரம். சோழராசனது பெண்ணொருத்தியை விக்கிரமார்க்கன் மணம்புரிந்திருந்தனன். மணம்புரிந்த சில காலத்தில் மாமனுன சோழன் இறந்து போனுன். சோழநாடு அரசின்றி நிலைகுலைந்தது. விக்கிரமார்க்கன் விரைந்து சென்று காஞ்சிநக ரடைந்து கலகங்களை யடக்கிக் கங்கைகொண்ட சோழபுரத்துக்குப் போய், அங்குள்ள பகைவரை வென்று, தனது மாமன் மகனுன தன் மைத்துனனை அரசு செய்வித்துத் திரும்பினுன். திரும்பிய சில நாள்களுக்குள்ளே

குடிகளின் பகைமையால் அரசச் சிறுவன் உயிரிழந்தனன். அப்போது வெங்கித்தலைவனை இராசேசன் (குலோத்துங்கச் சோழன்) சோணாட்டைக் கைக்கொண்டனன். வெங்கியாவது கலிங்கத்துக்கும் குண்டூருக்கும் இடையிலே கோதாவரிநதிக்கும் கிருஷ்ணநதிக்கும் நடுவில் உள்ள தேசம். இது இக்காலத்தில் கிருஷ்ணா ஜில்லாவென வழங்குகின்றது. கங்கைகொண்ட சோழன் இறந்தவுடனே சோழநாடு அலங்கோலப்பட்டிருந்த செய்திமாத்திரம் பரணியில் கூறியிருக்கிறது. விக்கிரமார்க்கன் வந்து தன் மைத்துனனுக்கு உதவிபுரிந்த செய்தி பரணியில் கூறியிருக்கவில்லை.

I குலோத்துங்கச் சோழன் தமிழ்நாடு முழுவதையும் கைக்கொண்டிருந்தான் என்பது குலோத்துங்கச் சோழ னுலாவில்

> மாடப் புகாருக்கும் வஞ்சிக்கும் காஞ்சிக்கும்
> கூடற்கும் கோழிக்கும் கோமானே

என்பதனால் விளங்கும். தமிழ்நாட்டுக் கப்பாலும் அநேக வெற்றிகள் அடைந்த செய்தி சிலாசாசனங்களால் தெரியவரும். அவற்றில் முக்கியமானவை சிங்களத்திலும் கடாரத்திலும்

பெற்றவை. கடாரம் என்பது பர்மாவில் ஆறகான் தேயத்தின் கடற்கரையில் இருப்பதொரு துறைமுகப் பட்டினம். இன்னும், துங்கபத்திரா நதியும் கிருஷ்ணாநதியும் கலக்கின்ற இடத்தில் உள்ள கூடற்சங்கமம் பல்லாரியில் உள்ள கம்பிளி என்பனவும் இவன் வெற்றிகொண்டதனால், கலிங்கமுட்படத் தெலுங்குநாடும் இவன் ஆட்சியுட்பட்டது என்பது போதரும். மொத்தத்தில் இவனுடைய அரசாட்சி கிழக்கே கங்கையாறு கடலொடு கலக்கின்ற இடந்தொடங்கிக் கன்னியாகுமரிவரையில் பரவியிருந்தது. இவனுடைய ராச்சியம் தற்காலம் யூரப்பில் பிரஞ்சுதேசம் அல்லது ஜர்மனிதேசம் எவ்வளவு விஸ்தீரண முளளதோ அவ்வளவு விஸ்தீரண முள்ளது. இங்ஙனம் மகா பராக்கிரமசாலியாக இருந்ததனால் இவன் திரிபுவன சக்கரவர்த்தி என்றோர் பட்டம் புனைந்துகொண்டான்.

குலோத்துங்கனுக்குக் கலிங்கத்தை வென்று கொண்டவன் கருணாகரன் என்பவன். அவன் வண்டைநகர ராசன்; தொண்டைமான் என்னும் பட்டம் பெற்றவன். அவனைப் படிக்காசு புலவர்

பண்டையோர் நாளையிலோ ரேழ்கலிங்கப்
பரணிகொண்டு
செண்டையு மேருவில் தீட்டுவித் தோன்கழற்
செம்பியன் செய
தொண்டைநன னாடு புரக்கினற கோனந்தித
தோன்ற லெங்கள்
வண்டையர் கோனங் கருணாகரன்
தொண்டை மண்டலமே

என்று புகழ்ந்திருக்கிறார். செம்பொற்சிலை யெழுபதில்

அலிக்காதரங் கூர்புனிதா மகிழ்ந்
தருள்வனனியரை பாம்புகழச்
செவிக்காரமுத மெனக்கேட்டுச்
சிந்தையுவந்து சீர்தூக்கிப்
புலிக்காயிரம் பொன னிறைநீக்கிப்
பொற்றண்டிகை பூடணததோடும்
கவிககாயிரம் பொன பரிசளிததான
கருணாகரத தொண்டை வன்னியனே

என்று கம்பர் புகழ்ந்திருக்கிறார். சிலை யெழுபது கம்பர் பாடியதாயினும் ஆக, எவர் பாடிய தாயினும் ஆக. கலிங்கத்தை வென்றுவந்த வன் வன்னிய குலதிலகம் என்பதும் இதனால் விளங்கும.

பரணிப் பிரபநதத்தில் கடைதிறப்பும் காடும் காளிகோயிலும் பேய்களுமான பகுதிகளை வைத்துப் பாடுகின்ற கருத்துப் பின்வரு

மாறு. பகைவரை வெல்லக் கருதிச் செல்லும் அரசன் இன்னகாலத்தில் வருவேனென்று தன் காதற் கிழத்தியரிடம் கட்டுரைத்துச் சென்றவன், குறித்தகாலத்தில் வாராமல் காலம் நீட்டித்துவர, அவர்கள் ஊடல்கொண்டு கடைதிறவாமையைக் கண்டு, அவன் தன் வாயிற் புலவரை விடுப்பான். அவர் அவர்களை நயமொழிகளால் சினநதணிவித்துக் கடைதிறக்குமாறு செய்து, அரசன் பகைமேற் சென்ற வழியில் உள்ள பாலையின் கொடுமையையும் பாலையின் அதிதேவதையான காளியையும், காளிக்கு ஏவல் செய்யும் பேய்களையும், அப்பேய்கள் பசியால் வருந்தினதையும், அரசன் பகைவரைக் களத்தில் கொன்றதால் அப்பேய்கள் பசிதணிந்து மகிழ்ச்சி யடைந்ததையும் கூறி, அம்முகத்தால் அரசன்கொண்ட வெற்றித்திறங்களைப் புனைந்துரைப்பர். வள்ளல்களைப் புகழ்வதற்கு ஆற்றுப்படை யென்கிற பிரபந்தம் மரபாதல்போல, மன்னருடைய வெற்றித்திறத்தைப் புகழ்வதற்குப் பரணிப் பிரபநதம் மரபாம்.

## நூல்

அபயகுலோத்துங்கச் சோழனுடைய மந்திரத் தலைவனான கருணாகரப் பல்லவத் தொண்

டைமான் வட கலிங்கநாட்டை வென்ற திறத் தைக் கூறத் தொடங்கிய புலவர், அச்சோழ னும் அவனுட்சியும் அவன் புலிக்கொடியும் நிலவு மிழ் கவிகையும் நிதிபொழி கவிகையும வாழ்க வென்றும் தழைக்கவென்றும வளர்கவென் றும், வேணியன் சேணியுன் வாணியனுன முழ் முதல்வரையும், கதிரவனையும், மூத்த இளைய பிள்ளையாரையும, நாமலை மகளிரையும், சத்த மாதர்களையும் வணங்கி,

காஞ்சி யிருககக கலிஙகங குலைநத
களிநன மடவீர்! கழற்செனனி
காஞ்சி யிருக்கக கலிஙகங் குலைந்த
களப்போர் பாடத் திறமினோ.

இலங்கை யெறிநத கருணா கரன்றன
இசலவெஞ் சிலையின வலிகேட்பீர்!
கலிஙக மெறிந்த கருணா கரனறன்
களப்போர் பாடத திறமினோ.

"சோழன் காஞ்சிநகரத்தில் இருக்கவும் கரு ணாகரன் கலிங்கநாட்டை வென்ற செய்தி யைச் சொல்லலுற்றேன்: மடநல்லீர்! கடை திறமின்! கபாடந் திறமின்!" என அரசனது காதற் கிழத்தியரை நோக்கிக் கூறுவார் போன்று நூற்பொருளைத் தோற்றுவாய் செய் கிறார். இங்ஙனம் கடைதிறப்புக் கூறுகின்

றழி சிருங்கார ரசங்களை விரித்துரைத்தலால் அவைகளை எடுத்தோதாது, வினை நிகழ்ச்சிக்கு இன்றியமையாதவற்றை இடத்துக் கேற்பச் சுருக்கியும் விரித்தும் கூறுகின்றேம்.

## I.

இனிக் களப்போர்க்கு அதிதேவதையான காளிதேவி வதிதருகின்ற காட்டையும், அதனிடைக் கோயிலையும் வருணிப்பார். அந்தக் காட்டிலே, ஓமைமரங்கள் உலர்ந்து கிடக்கும்; வீரைமரங்கள் புகைந்து எரிந்துகொண்டிருக்கும்; காரைச்செடிகள் பொரிந்து கிடக்கும்; சூரைச்செடிகள் கரிந்து கிடக்கும். உதிர்ந்த வெள்ளிலும் உணங்கிய நெல்லியும் பிதிர்ந்த முள்ளியும் சிதைந்த வள்ளியும் பலவிடங்களிலும் பரந்து கிடக்கும். வற்றின வாகைமரங்களும் கூகைமரங்களும் ஒடிந்த தேற்றுமரங்களும் மடிந்த வேலமரங்களும் முதிர்ந்த புன்கமரங்களும் முதிர்ந்து வறந்த இண்டங்கொடிகளும் நிரை நிரையாக இருக்கும். இரைதேடும் பொருட்டாக வானத்திலே வட்டமிடுகின்ற பருந்தின் நிழலானது, இந்தப் பாலைவனத்தின் வெம்மையைத் தாங்கமாட்டாமையால் ஒரிடத்

தில் நில்லாமல் ஓடித்திரிவது போன்றிருக்கும். அவ்வனம் நெருப்பைக் கொட்டிப் பரப்பிய உலைக்களமே போல்வதாக, அதனின்றும் திரண்டெழும் புகைக்கூட்டமே போலும், அவ்வனத்தின்மீது பறக்கும புறவினங்கள். முதிர்ந்த மரப்பொந்துகளில் நின்றும் பாம்புகள் புறப்படுவது, பேய்கள் நீர்வேட்கையால் வறந்த நாவை வாயில்நின்றும் நீட்டுவனபோலத் தோன்றும். அவ்வனமுழுமையும் பேய்த்தேரும் சூறுவளியும் சுழன்றுதிரியும். மூங்கில்கள் முதிர்ந்து வெடித்தலான் ஆங்காங்கு உதிர்ந்துகிடக்கும் முத்துக்களானவை, அக்கானகமானது வெப்பந் தரிக்கலாற்றாது முதுகு கொப்புளித்த கொப்புளங்கள்போற் காணப்படும்.

முள்ளாறுங் கல்லாறுந் தெவான ரோட
முன்னொருநாள் வாளபயன முனிந்தபோரின
வெள்ளாறுங் கோட்டாறும புகையானமூட
வெந்தவன மிந்தவன மொகஙிலொக்கும்.

இந்த வனத்திலே காளிதேவி திருவோலக்கமிருக்கும் கோயிலைப் பின்கூறுவார். சோழன் தன்வாளினால் மாய்த்த மன்னர் மனைவியரது ஆபரணங்களில் அழுத்திய மணிகளால் அக்கோயிலின் நடுவிடம் அமைத்திருக்கும்.

அதன் சுவர்கள், உதியருடைய வீரர் போரில் மடிந்தவர்களின் கருந்தலைகள் கற்களாகவும் அவர் குருதிநீரிற் குழைத்த நிணத்தொடக்கு கள் சேறுகவும் அடுக்கியிருக்கும். அபயன் பகைவர்மீ நெறிந்த அம்புகளே தூணும் உத்தர முமாக வைத்து, மிதிலைநகர்ப் போரிற்பட்ட பகையானைகளின் மருப்பைத் துலாமாகவும் அவற்றின் விலாவெலும்புகளைப் பாவாகவும் பரப்பியடுக்கி, விருதராசரை வென்றுகொண்ட யாளி யானை பன்றி சிங்கம் என்றிவற்றை நடு முகடாக (நாசிகையாக) இருத்தி, துங்கபத் திரை யாற்றின் கரையில் களப்போரிலே கொன்ற யானைக்கடத்தை வெளியடங்க மேலே கவித்திருக்கும். கோபுரமும் மதிலும், வெள் ளியாற் சமைததாற்போல, வெள்ளெலும்பாற் சமைக்கப்பட்டிருக்கும். இருப்புக்கால் இர ண்டு நாட்டி, இருப்புக்கம்பியொன்று மேலே வளைத்து, அதில் மாமிசக்கொடிகளையும் தலைகளை யுந் தூக்கி, மகரதோரணம் அமைக்கப்பட்டிருக் கும். அபய குலோததமனைப் பணியாத பாண் டியர்களின் மகரதோரணத்தை மதுரையில் நின் றுங் கொணர்ந்து ஊசலாக நிறுத்தியிருக்கும.

பரிவிருத்தி யலகிட்டுப் பைங்குருதி
நீர்தெளித்து நிணப்பூச் சிந்தி
எரிவிழித்த வீமவிளக் கெமபருங்கும்
ஏற்றியதோ ரியல்பிற் றாலோ

எதற்குஞ் சலியாத தறுகண வீரர்கள், கோயிலைக் குறுகி தேவியை வாங்கிட, தருவார், "அம்மே! எங்கட்கு வேண்டும் வரங்களைத் தருதி; எங்கள் உடலுறுப்புக்களை உனக்குப் பலியாக அரிந்து தருவோம்" எனப் பரவி ஆரவாரஞ்செய்வார்கள். ஓமத்தீ வளர்ப்பார்கள், அவ்வோமத்தீயிலே தங்கள் பழுவெலும்பைப் பிடுங்கி இந்தனமாக எரிய விடுவார்கள். அதனால் வடிகின்ற இரத்தத்தை, ஓமத்தீயை வளர்த்தற்கான நெய்யாக விட்டு எரிப்பார்கள்.

அடிக்கழுத்தின் நெடுஞ்சிரத்தை யரிவ ராலோ
அரிந்தசிர மணங்கின்கைக் கொடுப்ப ராலோ
கொடுத்தசிரங் கொற்றவையைப் பரவு மாலோ
குறையுடலங் கும்பிட்டு நிற்கு மாலோ.

அங்ஙனம் கும்பிட்டு நிற்கும் உடலம் கீழே விழுகின்ற வளவிலே, அக்குறையுடலை உண்ணும்படி பசி மிக்க சிலபேய்கள் அவ்விடமடையும். "தலைவி! பலியை ஏற்றுக்கொள்ளாய்" என்றாரவாரிக்கும் குரலோசை இடி இடித்தாற்போல முழங்கும். உடனே தமருகங்கள் மொகு

மொகென ஒலிக்கும். அப்போது பூதகணங்களும் யோகினிகளும் நெருங்கிவரும்.

சொல்லவா யோரி முழவாகக்
கொள்ளி வாயப்பேய் குழலிக்கு
நல்வாயச் செய்ய தசைதேடி
நரிவாய்த் தசையைப் பறிக்குமால்.
நிணமூன தசையும் பருந்திசிப்ப
நெருப்பும் பருத்தி யும்போனறு
பிணமும் பேயும் சுடுகாடும்
பிணங்கு நரியு முடைத்ததரோ.

இங்ஙனமாகக் கோயில் கொண்டிருக்கும் காளிதேவியானவள், அனந்தனையும் வாசுகியையும் மணியும் முத்தும் நிரைத்தமைத்த பாதசிலம்பாக அணிந்திருப்பவள். சந்திரனையோ அல்லது சூரியனையோ ஒப்பதான திலகத்தை உடையவள். யானைக்குடரையும் பாம்பினையும் ஒரு புரியாக முறுக்கி யானைத்தோலை இறுகக் கட்டியிருக்கிற உடுக்கையை உடையவள்.

கல்லவள முத்தமணிக சருமுகி லொப்பவளைக்
கரட தடக்கடயுட் கனக நிறத்தவளைச்
சிலைவளை யுறவுண்டு தொகைசெக விட்டபரித
திறலைவளைத்தருமத திருவுத ரத்தினளே.

கமலம்போன்ற கையும் கனிபோன்ற அதரமும் உடையவள். குலகிரிகளில் இரண்டினைக் குண்

டலமாகக் காதி லணிந்திருப்பாள்; சிலவற்றைக் கோத்து மணிவடமாக மார்பி லணிந்திருப் பாள். அக்கிரிகளே அவட்கு அம்மனைக்காயு மாகும், கந்துகமுமாகும், கழங்குமாகும். அவள் வேண்டினல் ஆகாதது ஒன்றுண்டோ.

## II.

இனி இந்தத் தேவிக்குத் திருத்தொண்டு செய்துகொண்டிருக்கும் பேய்களைக் கூறுவார். அவைகள் பனைமரங்களேபோன்ற கையுங் காலும் உடையன. பிலம்போன்ற வாயின. அவ்வாயினல் ஒழிவின்றி உணு உட்கொண்டே யிருப்பினும், நிறைதலில்லையான வயிறு வாய்த் திருப்பன. அவைகளின் முழந்தாள்கள் மூன்று முழங் கொண்டிருக்கும். என்பும் நரம்பும் எழுந்து தோன்றும் உடம்பை உடையன. அவற்றின் கொடிறுகள் ஒன்றோடொன்று ஒட்டி யிருக்கும். கண்கள் இடுங்கியிருக்கும். அவற் றின் முதுகு வற்றலாக உலர்ந்திருக்கும். அவற் றின் உந்திகள், பாம்பும் உடும்பும் உட்புகுகுறை தற்கான புற்றுப்போல இருக்கும். உடலெல் லாம் பாம்புகள் தொங்குவதுபோல மயிர் மூடி யிருக்கும். அவைகளின் மூக்குகள் பாசிபட்ட பழந்தொளைகளை உடையன. அவற்றின் செவி

யில் ஆந்தையும் நுருஞ்சியும் புக்கு அங்கு மிங்கு முலாவும். மண்வெட்டியுங் கலப்பை யுங் கோதது வைத்தாற் போன்றிருக்கும் பல் வரிசைகள். வாளைத் தட்டித் தகர்க்குந் தலே களே உடையனவாயிருக்கும். அவற்றின் உதடு கள் மார்பிடைத் தாழ்ந்துகிடக்கும். பசிப் பிணியே பிணியாகக் கொண்டிருத்தலான், முன் ளுளினும் பின்ளுளில் மெலிவனவாய், "களப் போரில் கூழ் பெற்றிலமேனும் இத்தேவி எங் களேப் பணிகொள்வதிற் குறைவின்" றெனக் கூறிக் குறைத்துக்கொண்டிருப்பன.

இவைகள முறைப்படி அதனதனிடத்திலே அவ்வணங்கினை யகலாமல் அருகிருநது அஞ் சலிசெய்து ஏவல் கேட்டிருக்கும். அபயன் பொருத களத்திலே இறந்துபட்ட சில அரசர் சிரத்தினின்றும் சிதறிய மூளையாகிய சேற்றிலே வழுக்கி வீழ்ந்து சில பேய்கள் ஒரு கால் முட மாயிருந்தன. அக்காலத்தில் களக்கூழ் அட் டற்பொருட்டுக் காய்ந்த வெண்பல்லான அரி சியை உரலிலிட்டு யானைக்கொம்பாகிற உலக் கையாற் குற்றும்பொழுது, உலக்கை பட்டுப் பல் சொற்றையாயின சிலபேய்கள். அவ்வர சன் சக்கரக்கோட்டத்தை வென்ற நாளில் அக்

களத்தில் குருதியுங் குடருங் கலந்து கூழடும் போது, கொதிக்கின்ற கூழ் தெறித்தலாற் சில பேய்களுக்கு ஒருகண் குருடாயின. அபய குலோத்துங்கன் மதுரையைக் கைப்பற்றிய நாளில் அட்ட களக்கூழை வெப்பத்துடன் உண்டலால், நாச்சுருண்டு கூழுடன் உட்புக்கு விழுந்ததாகவே, சில பேய்கள் ஊமைகளாயின. களப்போரிலே சேனுவீரர் செய்கின்ற ஆரவாரத்தாலே செவிடாயின சில பேய்கள். கடாரநகரத்தை அழித்தநாளில் போர்க்களத்தில் இரத்த வெள்ளத்திலே நீந்தி நீராடினதினுலே, சில பேய்கள் குரக்குவாத ரோகங்கொண்டு கூன் முதுகாயின. அவ்வபயன் சிங்களத்தொடு தென்மதுராபுரியைச் செற்று வெற்றி கொள்ளும்போது, களக்கூழ் சமைக்கும் சில மடைப் பேய்கள் கடலில் புகுந்து விரல்க டிறந்தன வாயின.

இங்ஙனமாக இடாகினிகள் இருபுறத்தும் இருந்து, சிறுபூதத் தூபக்காற் ஞேட்டிவிட்டுப் பஞ்சசயன மடுக்கிய படுக்கையின்மீது தேவியை ஈச்சோப்பிப் பணிமாறு நிற்கையில், வாயில் காக்கும் ஒரு பேய் வந்து அக்கோயினுயகியை வணங்கி "தலைவி!

சுரகுருவின் தூதாகி யமன்பாற் செல்வோன்
துணித்துவைத்த சிரமனறு நின்றபேயைச்
சிரமரிய அத்தற்குறவா யொளித்துப் போந்த
சிலபேயைத் திருவுள்ளத் தறிதியன்றே.

அவைகளில் முதுபேய் ஒன்று, 'அடியேனை விண்ணப்பஞ்செய்க' என்று வேண்டாநின்றது. திருவுள்ளம் என்னவோ? இப்பேய் யாதொரு தீங்கும் இங்கே செய்ததில்லை" என்று கூறிற்று. தேவியும் "அதனை அழைக்க" என்றனள். உடனே அது அச்சத்துடனே அருகணைந்து, "தேவீ! உனதாட்சியில் பிழைக்க வந்தனம். எங்கட்குத் திருவருள் செய்தல்வேண்டும்" என்று சொல்லி வணங்கி நின்றது. காளிதேவியும் உவந்து "முன்னைப் பிழை பொறுத்தனம்" என்ற வளவிலே, அம்முதுபேய் "நீ அருள் செய்தலால் உய்ந்தோம். நான் இந்திரசாலம் ஓராயிரம் கற்றுவந்தேன். அவற்றைக் காணாய்" எனக்கூறிச் சாலங்களை இழைத்துக் காட்டியது.

"இதோ இந்தக் கையில் இருக்கின்ற சில துதிக்கைகளைப் பார். அவைகளை இக்கையில் அழைத்த வளவிலே அவைகள் உருமாறி யானைத்தலைக ளாயின காண். இந்த யானைத்

தலையின் வாயில் நின்றும் உருகின்ற நீர் குதித்து இடி இடித்தாற்போலே கொக்கரித்த வளவிலே, இத்தலைகள், பேய்களானவை சுற்றித்திரிய, இந்நீரிலே குறைத்தலைப்பிணங்களாக மிதப்பதைப் பாராய். இது கிடக்கட்டும். அபயன் வெற்றிகொண்ட பெருங்களத்தின் பரணியை இப்பொழுது காட்டுகிறேன், காணாய். இதோ இறந்து படுகின்ற குதிரைகளைக் காண். உடல்கள் இரண்டாகத் துணிந்துவிழக் குறையுடல்கள் துடிக்கின்றவற்றைக் காணாய். அஞ்சியோடுகின்ற மதயானைகளை வெட்டிச் சாய்த்தலாலே, அவைகளின் இரத்தப் பிரவாகம் அநேகம் ஆறுகளாக ஓடுகின்றன, இதோபாராய். இதோ அறுபட்ட தோள்களை நோக்காய். அதோ அறுபடாத குடல்கள் இரத்த வெள்ளத்திலே மிதப்பதைப் பார். இற்றுப்போன தாள்களை நரிகள் ஈர்த்துச்செல்வதை இங்கேநோக்கு. வீரர்கள், இழுக்கு மூளையில் வழுக்கி விழுவதை அங்கே காண்க. இதோ நிணங்களைக் காண். நிணமணங் கனிந்த நிலங்களை அதோ பார். நிலமுழுவதும் பிணங்கள் விழுந்துகிடப்பதைப் பார். இவைகளெல்லாம் கிடக்கட்டும்.

நம்முடைய பேய்களல்லாத வேறு சில பேய்கள் இவைகளைப் பாராய்."

இங்ஙனம் காட்டும்போது, உடனிருந்த பேய்கள், இது மெய்யாகவே களக்காட்சியென நினைந்து, நிணவூன் தின்னும்படி ஒன்றின்மேலொன்றாக விழுந்தோடின. நல்ல இரத்தவெள்ளமென்று நினைத்துக் கையைக் குவித்து முகந்தும் ஒன்றுமின்றி வெறுங்கையாக எழுந்து விழுந்தன. கீழே காணப்பட்ட நிணத்தைத் தசையெனத் துழாவித் துழாவிப் பார்த்தன. அற்ற குறைத்தலையை வாயில்வைத் ததுக்கியும் வெறும் வாயை மெல்வனவாயின. இதனால் நகங்கள் முறிந்து முகஞ் சிதறுவதைக் கண்ட யோகினிமாதர் நகையாடினர். கடைசியாக எல்லாம் ஓகோ! இது சாலவித்தையென் றறிந்து கைவிதிர்த்தன.

இவ் விந்திரசாலங்களை இழைத்து வணங்கி நின்ற முதுபேயை நோக்கி, முன்னைப்பேய்கள், "அப்பா! தேவியாணை. இனி இம் மாய வித்தைகள் வேண்டா, இவற்றைத் தவிர். இவ் வித்தைகளை எங்கே கற்றனை?" என்றன. அப்போது அம் முதுபேய் அத்தேவியை நோக்கிச்

சொல்லும்:—"அடியேன் உன் சினத்தையும் சுரகுருவின் சினத்தையும அஞ்சினேனாய் இமாசலம் புக்கிருந்தேன். உன்னுடைய பழவடியார்க்கு அடியாளான தெய்வ உருத்திரையோகினி என்பாள் உங்கள் சினம தணிதற்கான மந்திரவிச்சைகள் கற்றுக்கொடுத்து 'இன்னும் உனக்கு இங்கே நன்மைகள் பல்கும், இங்கிருக்க' என்றனளாக, நான் அங்கே சில காலம் வதிந்தேன். வதிந்தநாளில நிகழ்ந்ததான சில செய்தி உரைப்பேன் கேள்" எனக் குலோத்துங்கச் சோழனது இராசபாரம்பரியத்தை உரைத்ததாக உரைப்பர் ஆசிரியர்.

## III.

தமிழ்நாட் டெல்லையுள் நல்லேறி எதிர்த்துப் பொருமம அரசரைப் பெருந கரிகாலன், வடதிசைக்கண் பகைப்புலா மெனக் கருதி அத்திசை நோக்கிப் போகியநாளில், இமையவருறையும இமயமலை பகையாகக் குறுக்கிட்டு விலக்கிற்றாகலின், இம்மலை எனக்குப் பகையாகக் குறுக்கிட்டு விலக்கிற்றென முனிந்து, அதனைப் புறங்காண்டற்கும் அதன் வடபாலும் தனது ஆணைசெல்லுதற்கும், சாத்தனதருளால்

தான்பெற்ற * செண்டினாலே அதனை அடித்துத் திரித்து, அதன் பிடரிடத்தே தனது புலிக்குறியைப் பொறித்து, மிகவும் அதனை முன்னின்ற படி மறித்து நிறுத்தினான். அப்பொழுது முக்காலமு முணர்தலவல்ல நாரதமுனிவன் அங்குற்று "அரச! உன்போல்வார் மன்னர் இவ்வுலகின்கண் எவரு மிலர். நான் உரைப்பது கேள். முன்னாளில் பாராசரியன் பாரதம் உரைப்ப அச்சரிதத்தை ஐங்கரன் மேரு சிகரத்தின் ஒரு புறத்திலே எழுதின னன்றே. இப்பொழுது நான் உரைப்பதை நீ இம்மலையின்மீது ஒருபுறத்தில் எழுத" என்றேவினான்:—

மாதவன் உந்தியில் மலரவன் பிறந்தான். மலரவன் மரீசியைப் பெற்றான். அவன் மைந்தன் காசிபன் கதிரவனைத் தந்தான். அவன் மகன் அரசாட்சி செய்கின்ற காலத்தில், தன் மைந்தன் ஓ ரான்கன்றை மிதித்துக் கொன்றானாக, அவனை மடித்துப் புகழெய்தினான். இவன் புதல்வன் இக்குவாகு ஈன்றெடுத்த

---

* கச்சி வளைக்கைச்சி காமகோட்டங் காவல, மெச்சி யினிதிருக்கு மெய்ச்சாத்தன்—கைச்செண்டு, கம்பக் களிற்றுக் கரிகாற் பெருவளத்தான், செம்பொற் கிரிதிரித்த செண்டு. சிலப்பதிகார வுரை 138—பக்கம் பார்க்க.

மதலை, தானவர் முதலான பகைவரை வென்ருன். அவன் சிறுவன் புலியும் மானும் ஒரு துறையில் உதக முண்ணும்படி அரசு செலுத்தினன். அவனுக்கப்பால் முசுகுந்தன் இமையவ ரிடுக்கண்ணுந் தீர்த்தான். ஓரரசன் அமரருக்கு அமுதங்கொடுத்தான். சிபிச்சக்கரவர்த்தி என்பான் ஒரு புறவின் பொருட்டாகத் தன் தசையை அரிந்துவைத்துத் துலைக்கட்டி லேறினன்.

அம்மரபில் வந்த சுராதிராசன் என்கின்றவன் சோழமண்டலத்தை அமைத்தான். அவன் மரபினர் இராசகேசரிகளாகின்ற இருவர் புலிக்கொடி நிறுவி ஏழுலகாண்டனர். அப்பால் இது வழக்கெனக் காலனுக் குரைத்த அரசன் ஆட்சிசெய்தான். அப்புறம் காவிரியாற்றைக் கொணர்ந்த கவேரன் * ஆண்டான். பின் இவ்வகிலலோகமும் மேலுலகமும் வென்று கொண்ட சோழன் ஆட்சிசெய்தான். பின்பு இந்திரனைத் தன் கொடியிற் புலியாக வைத்த சோழன் உலகளித்தான். பின்னர் கடலொன்

* தாவா நீர்க்காவிரிப் பாவை தன் தாதை, கவேரனுங் கிருந்த கவேரவனமும். மணிமேகலை மலர்வனம் புகுகாதையைப் பார்க்க.

றில் கடலொன்றினைப் புகவிட்ட மன்னனும், தன் குருதியை உண்க எனக் கொடுத்தவனும், வாதராசனை* வலிந்து ஏவல்கொண்ட அரசனும் உலகோம்பினர். அதன்மேல், வானத்துத் தூங் கெயிலை யழித்த கோனும், விமானங்களை விண் ணேறச் செலுத்திய இராசனும் அரசியற்றினர். பிற்பாடு, பாரதயுத்தத்திலே தருமராசனுடைய சேனைக்குத் துணைநின்ற சோழனும், ஒரு குகைப்பிலத்தின் வழியாகச் சென்று நாககன் னிகை ஒருத்தியை மணங்கொண்ட மன்ன னும் ஆணைபோக்கினர். அப்பால், சேரமான் கணைக்கா லிரும்பொறையோடு போர்செய்து அவனைப் பிடித்துக்கட்டிச் சிறைப்படுத்தி, பொய்கையார் தன்னைச் சிறப்பித்துக் களவழி நாற்பது பாடினாராக, அச்சேரமானைச் சிறை வீடு செய்த **சோழன் செங்கணன்** மண்டலாதி பத்தியம் பண்ணினான்.

நீ வழுதியையும் சேரனையும் முடிசிதைத்து வெற்றித்திருவைத் தழீஇயினாய். காவிரிக்கரை யைச் சிற்பசாலைக்கொண்டு நன்கு கட்டுவிக் கும்படி எழுதுவித்த படத்திலே முகரி மிகை யாவது கண்டு, அதனைப் படத்தில் நின்றும் நீ

* வாதராசனை எனறும் நூலில பாட பேதம் உணடு.

அழித்தமாத்திரத்திலே, அந்த முகரி உடனே அழிந்ததன்றோ. அப்புறம் குருபிநாட்டை வென்றனை. உன்னைப் புகழ்ந்து பட்டினப்பாலை பாடிய கடியலூர் உருத்திரங்கண்ணனார்க்குப் பதினாறிலக்ஷம்பொன் அளித்தாய். எக்காலத்தும் எவர்க்கும் பிற்படாத சேரமன்னரையும் பாண்டிமன்னரையும் கிழிகள் சுற்றி அவர்கள் தலையிலே விளக்கெடுப்பித்து அவர்களை மான பங்கம் பண்ணினாய்.

ஓ ரானையின் மீது கொண்டு விண்ணின் கீழுள்ள மண்ணனைத்தையும வென்று, ஈழமண்டலத்தையும் நான்மாடக்கூடலையும் கைப்பற்றிப் புகழ் சிறக்கும் பராந்தகன் என்னப்படும் வீரநாராயண சோழன் இனிப் பிறப்பான். சேரமண்டலத்திலே சதயநாள் திருவிழாவை ஏற்படுத்திப் பல்லாயிரம் யானைகளைக் கவர்ந்துவந்து, ஓராணைமீது காலைக் கதிரவன் போற்கொண்டு உதகையென்னும் ஊரினைவெல்வான் ஒரு சோழன். மண்ணை யென்னும்பதியிலே தன் யானைகள் கங்கைநீருண்ணக் கடார நாட்டினைக் கைக்கொண்டு தன் குடைநிழலில் வைத்து, கல்லியாணரைக் கட்டறச சிதைத்துக் கம்பிலி என்னு நகரிலே ஜயத்தம்ப நட்டுவைத்து

எண்டிசைக் கிரிகளின்மீதும் புலிக்குறியைப் பொறிப்பான் ஒரு சோழன். ஒரு சோழன் கொப்பை நகரிலே பகைவரைப் பொருது உலகுய்யச் செய்வான். அப்பால் மற்றொரு சோழன் வேதமார்க்கத்தை முன்போலப் புதுக்கி மனுவினும் மும்மடி நான்மடி சிறப்ப அறம் வளர்ப்பான்.

குந்தளரைக் கூடற் சங்கமத்து வென்ற
கோனபயன குவலயங்காத தளித்ததபின்னை
இந்தநிலக் குலபபாவை யிவனபாறசேர
என்னதவஞ் செய்திருந்தா ளென்னத்தோன்றும்

பின்,

எவ்வளவு திரிபுவன முளவாய்த தோன்றும்
எவ்வளவு குலமறைக ளுளவாய் நிற்கும்
அவ்வளவு திகிரிவரை யளவுஞ் செங்கோல்
ஆணைசெல்ல அபயன காத தளிக்குமாறும்.

முனிவன் கூறினன். கரிகாற் பெருவளவன் ஈதெல்லாம் இமாசலத் தெழுதினான்.

இங்ஙனமாகச் சோழ வமிசத்தின் தொன் மாபும் புகழும் நாரதர் மொழிந்தாராகக் கரிகாலன் மேருவிற் பொறித்தபடியே, காளிதேவியின் திருவோலக்கத்திலே அங்குவந்த முதுபேய் கூறிமுடித்தது. இது கேட்ட அத்தேவி "இம்மாண் மாபில் வந்தவனுவான், உலகையெ

லாம் ஒரு கவிகை நிழலில் வைத்த சயதுங்கன்'' என்றலும், அயலிருந்த அலகைகள் ''சிவானுக்கிரகம் பெற்றுள்ள செல்வி! யாங்கள் அபயன் காக்கும் பூதங்களாகப் பிறந்து பேறு பெற்றிலோம். அவமே பேய்களாகப் பிறந்து கெட்டோம். நீ எங்களைக் காத்தாலன்றி எங்களைக் காப்பவர் வேறு எவருளர்.

ஓய்கின்றே மோய்வுசகு மினியாறறேம்
ஒருநாளைக் கொருநாள் நாஙகள்
தேய்கின்றபடிதேயந்து மிடுககற்றேம்
செற்றாலும் உயய மாட்டேம்.

வேகைககு விறகானேம் மெலியா நின்றேம்
மெலிந்தவுடல் தீயப்பதறகு விறகுங் காணேம்
சாகைக்கித் தனையாசை போதும பாழிற
சாக்காடு மரிதாகத தநது வைததாய.

சாவத்தாற் பெறுதுமோ சதுமுகன்றான்
கீழ்நாங்கள் மேனாட் செயத
பாவத்தால் எம்வயிற்றிற் பசியைவைத்தான்
பாவியேம் பசிக்க வில்லோம்.

பதடிகளாய்க் காற்றடிப்ப நிலைநி லாமல்
பறக்கின்றேம் பசிககலைந்து பாதி நாக்கும்
உதடுகளிற் பாதியுந்தின் றொறுவா யானேம்
உனக்கடிமை அடியேமை ஓடப் பாராய்.

அகளங்கன் நமக்கிரங்கான் அரசரிடுங்
திறைக்கருள்வான் அவன்றன் யானை
நிகளம்பூண் டனவடியே நெடும்பசியால்
அறவுலாந்து நெற்று யற்றேம்.

மூக்கருகே வழுநாறி முடைநாறி
உதடுகளுந் துடிப்ப வாயை
ஈக்கதுவுங் குறியாளுய்ந் திருக்கினறேம்
அன்றுகி வினறே சாதும்.

எனச் சொல்லி முறையிட்டன. அப்போது, இமயவெற்பினின்றும் வந்த முதுபேய் கைதொழுது இறைஞ்சி, ''அம்மே! அடியேன் வடகலிங்க நாடெய்திய விடத்து உண்டான சில நிமித்தங் கூறுகின்றேன், கேண்மோ. ஆண் யானைகள் மருப்பொடிந்து மதம் வற்றின. பெண்யானைகள் மருப்பெழுந்து மதம் பொழிந்தன. விளக்கொளி கருநிறமாக எரியக் கண்டேன். மேகங்கள் இரத்தமழை பொழிந்தன. முரசங்கள் இருந்த விடத்திலிருந்து வறிதே அதிர்ந்தன. இராக்காலத்திலே இந்திரவில்லிடு வதைக் கண்டேன். ஓர் மனையில் ஊமன் எழ ஓரி அழுதது. ஓமத்தீ ஈமத்தீயேபோல் எரியப் பார்த்தேன். பூக்களால் தொடுத்த மாலைகள் புலால் நாற்றம் வீசின. ஓவியங்கள் உடல்

வியர்த்தன. ஊற்றுநீர் செந்நீராக வரக் கண்டேன்." எனக் கூறி, "இந்நிகழ்ச்சியின் விளைவு என்னாகுமோ?" என்று வினவிற்று. அதுகேட்ட அணங்கு, "உங்கள் நிமித்தமும வடகலிங்கத்து நிகழ்ந்த நிமித்தமும் உங்கட்கு நன்மையே தரும். நமது கணிதப் பேய்கள் நம் அகளங்கன் மதயானைகளால் ஒரு பரணி உண்டாகும் எனத் தங்கள் நனவுங் கனவுங் கூறின. இனி உங்கட்குக் குறை யில்லை" என்றனள். அது கேட்ட பேய்க்கூட்டங்கள், நடிப்ப வலியற்றன வேனும், களிப்புடன் நடித்தன. வாய் நீரூறின: களிசிறந்தன. விலாவெலும்புகளும் அதிரும்படி நகையாடின; பசியற்றன. இங்ஙனம் ஆடி இரைத்து எழுந்த பேய்க்கணங்கள், "அணங்கே! கலிங்கக் களக்கூழ் வயிறுார உண்டற்குப் போதுமே" என்று கேட்ப, அவ்வணங்கும்,

போதும்போ தாதெனவே
  புடைப்படல மிடவேண்டா
ஓதஞ்சூ ழிலங்கைப்போக
  கொட்டிரட்டி கலிங்கப்போர்.

எனக்கூறி அகளங்க குலோத்துங்கனது அவதார வைபவத்தைக் கூறுவாளாயினள்.

# IV.

அன்றிலங்கை பொருதழித்த அவனேயப்
பாரதப்போர் முடித்துப் பின்னை
வென்றிலங்கு கதிராழி விசயதரா
னெனவுதித்தான் விளம்பக் கேண்மின்.

சந்திர குலத்தரசன் ஒருவன் கங்கைகொண்ட சோழன் பெண்ணைத் திருமணஞ் செய்துகொண்டனன். அப்பெண்ணின் திருவயிற்றில் பாற்கடற் பள்ளியானே வந்து தோன்றித் திருவவதாரஞ் செய்தருளினான்.

வந்தருளி யவதாரஞ் செய்தலுமே
மண்ணுலகு மறைக ளனைத்தும்
அந்தரநீங் கினவென்ன வந்தரதுந்
துமிமுழங்கி யெழுந்த தாங்கே.

புஷ்பவருஷம்போல மேகங்கள் வருஷித்தன. பற்பல நன்னிமித்தங்கள் தோன்றின. அப்போது கங்கைகொண்ட சோழன்தேவி குழந்தையைத் தன் கையி லெடுத்து, "இக்குழவி சந்திரகுலோத்தமனாகவும் இருக்கின்றனன், சூரிய குலோத்தமனாகவும் இருக்கின்றனன். இவன் அவயவக்குறியெல்லாம இருமுதுகுரவரை ஒத்திருத்தலான், இவன் நமக்கு (சுவிகார) புத்திரனாகிச் சூரியகுலத்தைப் பாலிக்கத்தக்க தாங்

கனு யிருக்கின்றனன்" என மனமகிழ்ச்சி யுடனே வளர்ப்பாளாயினுள். இருகுலத்தரசரும் இக்குழந்தையைத் தங்கள் தவப்பயனென் றெண்ணினுர்கள். குழந்தையும் உபய குலோத்துங்கன் என்னும் பெயருடனே வளர்ந்துவந்தது. இச்சிறுவன் தண்டு வாள் பணிலம் நேமி என்னும் ஐம்படைகளை ஏந்தியிருத்தலால், இவன் கண்ணன் என்பதே துணிவு. ஐயாட்டைப் பிராயங் கடந்தபிறகு முந்நூல் தரித்துத் துவிஜனுயினுன். வேதங்கள் நான்கனையும் வேதியர்பால் கேட்டறிந்தனன். அறநூல்கள் கற்றும் மறப்படைகள் பயின்றும், குதிரையேறியும் யானையேறியும் சாரிவிடப் பயின்றும், ஏனைக் கலைகள் கற்றும், இளைஞரேறுயினுன். கங்கைகொண்ட சோழனும் குலோத்துங்கனுக்கு இளவரசுபட்டங்கட்டி இன்புறச் சிறப்புச் செய்துவந்தான். இளவரசனும் காளைப்பருவத்தே திக்குவிசயஞ் செய்வானுகிப் புறப்பட்டு வடாதுசென்று சக்கரக்கோட்டத்தைக் கைப்பற்றினுன்.

சரிக ளங்தொறுந் தங்கள் சயமக
டன்னை மன்னப யனகைப் பிடிசதலும்
பரிக ளுங்கனி றுந்தன ராசியும்
பாரி போகங் கொடுத்தனா பார்த்திபர்.

அங்குநின்றும் போந்து விருதராசனை வெற்றிகொண்டான்.

அதுகாலை, கங்கைகொண்ட சோழன் இறந்தானாக, சோணாடு

மறையவர் வேள்வி குன்றி
மநுநெறி யனைத்து மாறி
துறைகளோ ராறு மாறிச்
சுருதியு முழக்க மோய்ந்தே;

சாதிக ளொன்றோ டொன்று
தலைதடு மாறி யாரும்
ஓதிய நெறியி னில்லா
ஒழுக்கமு மறந்து போயே;

ஒருவரை யொருவர் கைம்மிக்
கும்பாதங் கோயில் சோம்பி
அரிவையா கற்பிற சோம்பி
ஆண்களு மழிய வாங்கே

இங்ஙனம் நிலைகுலைந்து சீரெல்லாம் மாறாயிற்று. இளவரசன் விரைவில் இங்குற்றுத் திருவபிடேகஞ் செய்துகொண்டான். அப்போது அரசர்கள் அவன் அடிமிசை அறுகெடுத்திட்டனர். மறையவர் அவன் முடிமீது முடியெடுத்திட்டனர். மநுநெறி தலையெடுத்திட்டது. இவன் புகழ் நிலவுவதாயிற்று.

நிழலிலடைந் தனதிசைகள்.
நெறியிலடைந் தனமறைகள்.
கழலிலடைந் தனருசியர்.
கடலிலடைந் தனர்செழியர்.

பரிசில்சுமந் தனகவிகள்.
பகடுசுமந் தனதிறைகள்.
அரசுசுமந் தனவிறைகள்
அவனிசுமந் தனபுயமும்.

வேறு.

விரித்தவாளுகிர் விழித்தகட்புலியை
மீதுவைக்க விமயத்தினைத்
திரித்தகோலில் வளைவுண்டு நீதிபுனை
செய்யகோலில் வளைவில்லையே.

கதங்களிற்பொரு திறைஞ்சிடாவரசர்
கால்களிற்றளையு நூல்களின்
பதங்களிற்றளையு மன்றிவேறொரு
பதங்களிற்றளைக ளில்லையே.

மென்கலாப மடவார்கள்சீறடி
மிசைச்சிலம் பொலி விளைப்பதோர்
இன்கலாம்விளைவதன்றி யெங்குமோர்
இகற்கலாம் விளைவதில்லையே.

இங்ஙனம் அரசாட்சிசெய்து

வருசெருவொன் றின்மையினால் மற்பொருஞ்சொல்
புலவோர்கள் வாதிற்போரும்
இருசிறைவா ரணப்போரும் இகல்மதவா
ரணப்போரும் இனைய கண்டே

கலையிலும் கலைவாணர் கவியிலும் இசையிலும் மனுநீதி முறையிலும் மறையிலும் பொழுது போக்கி யிருந்தான்.

ஒருமுறை காவிரியாற்றங் கரையிலே வேட்டையாடியிருந்தவன் "பாலாற்றங்கரையிலே பரிவேட்டையாடப் போதல்வேண்டும். முரசறைந்து சாற்றுக" என்றேவினான். கணிதநூல் வலவர்கள் தெரிந்துரைத்த நன்னாளில் நல்லோரையில் படை நான்கும் திரண்டெழுந்தன. விப்பிரர்கள் தானதருமங்கள் பெற்றனர். அபயம் புகு மன்னர் அபயதானம் பெற்றனர். கவிவாணர்கள் கனகதானம் பெற்றனர். அரசனும் அம்பலத்தரசாகும் ஆநந்தக் கூத்தரிடத்திலே திருவருளுடனே விடைபெற்றுக்கொண்டு கடகளிற்றின்மேல் ஏறினான். அவன்மீது கொற்ற வெண்குடை கவிக்கப்பட்டது. பக்கலிலே கவரி யிரட்டப்பட்டது. வலம்புரிச்சங்கங்கள் முழங்கின; பல்லியங்களு முழங்கின. சூழ்ந்து வருகின்ற அரசர்களெல்லாம் சயகோஷஞ் செய்தார்கள். அந்தணர்களெல்லாம் வேதகோஷம் செய்தார்கள். அநேக அரசருடைய தேவியர்கள் அரதனமாலையும் அலரின் மாலையும் அணிகலன்களும் எடுத்தெடுத்துதவ, அரச

னுடனே தானும் ஆணை நடத்தும் உரிமைபெற்ற இராசபத்தினியான தியாகவல்லியானவள் அழகினுக்கழகாக அவற்றை யணிந்து, அவர்கள் இடையே பிடியானைமீது ஏறினாள். அரசரெல்லாம் யானைமீதும் அரசியரெல்லாம் பிடியானைமீதும் வருகின்ற காட்சி, களிற்றின்மீது களிறும் பிடியின்மீது பிடியும் பற்பலவாக வருதல்போலும். மேகங்களின்மீது மேகங்கள் முழங்குமாறுபோல, யானைகளின்மீது முரசங்கள் முழங்கின. துகிலின்மீது துகிலடுக்கினாற்போல், கொடிகளின்மீது முகிலினங்கள் படிந்துவந்தன. பூமியின்மீது மற்றொரு பூமியேபோல் படைதூளி எழுந்து பரக்க, அரசன் அதிகை மாநகரினின்றும் புறப்பட்டான். புறப்பட்டுப் போகின்ற வழியெல்லாம்,

எங்குமுள மென்கதலி யெங்குமுள தண்கமுகம்
எங்குமுள பொங்குமிளநீர்
எங்குமுள பைங்குமிழ்கள் எங்குமுள செங்குமுதம்
எங்குமுள செங்கயலகளே.

ஆறலைதரங்கமுள அன்னநடை தானுமுள
ஆலைகமழ் பாகுமுளவாம்.

அதனால் சயதுங்கன் தனது பொன்னிவள நாடே நாடிச்செல்கின்றான் போன்று சென்று கச்சித்திருப்பதியை எய்தினான்.

கச்சிப்பதி யெய்தினன் அகளங்கதுங்கன் எனக் காளிதேவி உரைத்தமாத்திரத்திலே, ஒரு பேய் தனது கால் பிற்பட மனத்துவகை முற்பட முன்சென்று,

"கலிங்கர் குருதி குருதி
கலிங்க மடைய வடைய
மெலிந்த வுடல்க டடிமின்
மெலிந்த வுடல்க டடிமின்.

உணங்கல் வயிறு குளிர
உவந்து பருக பருக
கணங்க ளொழுக வொழுக
கணங்க ளொழுக வொழுக.

வயிறுக ளெனனிற போதா
வாய்களோ போதா பணடை
எயிறுக ளென்னிற போதா
வென்னினு மீண்டப் போதும்.

சிரமலை விழுகச் செங்நீர்த
திரைகடல் பருக சாலப்
பிரமனை வேண்டி யின்னும்
பெரும்பசி பெறவும் வேண்டும்."

வேறு.

என்றவோசை தனசெவிக்
கிசைத்தலுந் தசைப்பிணந்
தின்றபோற் பருததமெய்
சிரித்துமேல் விழுந்துமே,

ஓகைசொன்ன பேயின்வாயை
யோடிமுத்த முண்ணுமே.
சாகைசொன்ன பேய்களைத்
தகர்க்கப்புறக் கொண்ணுமே.

பிள்ளைவீழ வீழவும்
பெருந்துணங்கை கொட்டுமே.
வள்ளைபாடி யாடியோடி
வாவென வழைக்குமே.

என்னவுரைத்த தேவிவாழி
வாழியென்று வாழ்த்தியே
கன்னவுரைத்த பேய்களைக்
கழுத்தினிற் கொட்டுமே

ஆடிவருபேய்களின் துன்பத்தைத் தவிர்த்து அடுகளத்தையறிந்து அங்குநின்றும் ஓடிவரு பேயை, "பகைநேர்ந்த விதத்தைச் சொல்லாய்" என்று தேவி பணித்தாள். அதன்மேல் அப் பேய் உரைக்கலுற்றது.

ஆயிரங்களிலும் கொல்லப்பட்டு கலிங்கர் மடிந்த களப்போரினை விரித்துச்சொல்ல வேண்டினால் சொல்லலுற்றவர்க்கு ஆயிரம் நாக்கள் வேண்டுமே; கேட்கலுற்றவர்க்கு ஆயிரம் நாட்கள் வேண்டுமே. இதனை ஒருவர்க்கு ஒருவர் ஒருவாய் கொண்டு சொல்லவொண்ணு தென்

ருலும், சிறியேன் ஒருவாறு விண்ணப்பஞ் செய்கிறேன். சிறிது கேட்டருள்க.

காஞ்சித் திருநகரின் தென்குடதிசையிலே செய்த சித்திரமண்டபத்தின் நித்திலப் பந்தரில், வெண்குடை நிழற்ற வெண்சாமரை வீச, விசயலக்ஷ்மி விலாசத்துடனே, தேவியர் சமேதனாகச் சிங்காதனத்தின் மீதேறி, நாடகம் வல்லவர் நாடகநடிப்பப் பாடல் வல்லவர் பாடல்பாட, நிருத்தம் வல்லவர் நிருத்தஞ்செய்ய, சூதரு மாகதரும் புகழ, மாதர் மங்கலம்பாட, வீணையும் யாழும் குழலுந் தண்ணுமையும் வல்லவர்கள் பல்வேறு விதமாக அவ்வாச்சியங்களை வாசியாநிற்க,

> தாளமும் செலவும் பிழையாவகை
> தான வகுத்தன தனனெதிர் பாடியே
> காளமுங் களிறும பெறும பாணரதம்
> கல்வியிற பிழைகண்டனன கேட்கவே,

இவனை வந்தடிதொழு மாசர் தங்கட்குப் பணிமாறும் குடைகளையுஞ் சாமரங்களையும் தாங்களே இவனுக்குப் பணிமாற, வண்டை நகர் மன்னனாகிற கருணாகரத்தொண்டைமான் முதலான மந்திரப்பாரகர்கள் சூழ்ந்துநிற்ப, சயதுங்கன் திருவோலக்கங் கொண்டிருந்தான்.

வாயில் காப்பவர் வந்தடிபணிந்து, "திறைப் பொருளை இறுக்கும்படி, எம்பெருமானே! வேந்தர்கள் வாயில் புறத்துக் காத்துக்கிடக்கின்றனர்" என்றனர். அரசன் "அவர்களை விடுக" என்றனன். அவ்வளவிலே,

தென்னவர் வில்லவர் கூபகர் சாபகர்
சேதிபர் யாதவரே
கன்னடர் பல்லவர் கைதவர் காடவர்
காரிபர் கோசலரே

கங்கர் கராளர் கலிங்கர் தமிழ்ந்தர்
கடம்பர் துளும்பாகளே
வங்கர் இலாடா மராடர் விராடர்
மயிந்தர் சயிந்தர்களே

சிங்களர் வங்களா சேகுணர் சேவணர்
செயயவ ரையணரே
கொங்கணர் கொங்கர் குலுங்கர் சௌந்தியர்
குச்சரர் கச்சியரே.

மத்தவர் மதகிரர் மாளுவர் மாகதர்
மச்சர் மிலேச்சர்களே
குத்தர் குணத்தர் வடக்கர் துருக்கர்
குருக்கர் வியத்தர்களே.

என்ற அரசர்கள் அரசனடி குறுகிப் பணிந்தெழுந்து, "மகா ராசாதிராச கம்பீரனே! நீ எங்கட்கு அருள்செய்த நாடுநகரங்களின் பொருட்

டாக இறுத்தல் வேண்டும் திறைப்பொருள் கொணர்ந்தனம்:—

ஆரமிவை யிவை பொறகலம்
  ஆனையிவை யிவை யொட்டகம்
  ஆடலயமிவை மற்றவை
  யாது முடியொடு பொட்டகம்
ஈரமுடையன நித்திலம்
  எறுகவமணி கட்டிய
  ஏகவடமிவை மற்றவை
  யாதும் விலையில பதக்கமே.
இவையு மிவையு மணித்திரள்
  நிவை கனககுழை
  நம் வெயிலு மெறித்திட
  இலகுமணி பகரக்குழை.
உவையு முவையு மிலைகணம்
  உடைய பிடியிவை யுட்பக
  டுயர்செய கொடியிவை மற்றிவை
  உரிமையரிவையா பட்டமே."

என்றிங்ஙனம் இவைபிற்றை அவர்கள் அரசன் திருமுன்னர்க் காட்டிக் கைகுவித்து நின்றனர்.

அப்போது அரசன் "இவர்களொழிய இன்னுந் திறைகொடாதவர்கள் உளரோ?" என வினவினன். அப்போது கடகர் முன்வந்து நின்று எங்கள் திறை கொணர்ந்தனம் என்று கூறிக் கழல் வணங்கினர். "இவர்களுடனே வடக

லிங்கத்தரசன் இரண்டு முறையாகத் திறை கொணர்கிலன்" என்ற வளவிலே, அரசன் வெகுண்டு "அங்ஙனமாயின், வடகலிங்கஞ் சென்று அவன் ஆனைகளைக் கொண்டணைமின். அவனையுங் கொணர்மின்" எனக் கூறினன். கூறலும், கருணாகரத்தொண்டைமானென்ற மந்திரத்தலைவன், "அடியேனுக்கு விடை கொடுக்க. அங்ஙனே கொணர்ந்து தருவேன்" என்ன, அரசனும் நன்றென நவின்றனன்.

## V.

உடனே கருணாகரன் வாரண மிவர்ந்தனன். நாற்படையுஞ் சூழ்ந்து நெருங்கி வழிக்கொண்டன. நாற்றிசையும் அதிர்ந்தன. எழுகடல்களும் அடங்கின. மலைகள் பிதிர்ந்தன. தூளி படலம் பிறந்தது. பாலாறு, குசைத்தலை, சுவர்னமுகரி, கொல்லி என்னும் நாலாறுங் கடந்து பெண்ணையாற்றையுங் கடந்து நடந்தன. அப்பால் வயலாறும் மண்ணாறுங் குன்றியுங் கடந்து கிருட்டினையும் பிற்படப் போயின. போய், கோதாவிரி, பம்பாநதி, கோதமை நதிகளும் இப்பாலாக அப்பாற்சென்றன. சென்று

கலிங்கத்தைச் சேர்ந்து சில பதிகளிற் படையெரி கொளுவி, சில பதிகளைச் சூறைகொண்டன.

குடிகளெல்லாம், "மதில்கள் இடிகின்றனவே, வீடுகள் எரிகின்றனவே, புகைத்திரள்கள் எழுகின்றனவே. ஐயோ, அரண் எங்கே? நமக்குப் புகலிட மெங்கே? இங்கே தலைவன் யாரே? அதோ படைகள் வருகின்றன வருகின்றனவே! நாம் மடிகின்றனம் கெடுகின்றனமே" என்றிரங்கி யேங்கி அலைந்து துடித்தனர். துடித்து "அந்தோ! நம்மரசன், அபய குலோத்துங்க மகாராசனுக்குக் கொடுக்கத்தகுவதான திறை கொடாமல் உரைதப்பினன். எத்தனை சொல்லினும் செவியில் ஏற்றுக்கொள்ளான். அபயன் விடுபடை வந்து விட்டதே. இனி என்செய்கேம்! ஐயோ" என்றலறி, உரைகுழறி, உடல்பதறி, ஒருவர்முன்னொருவராக அரையிற் கட்டிய ஆடை அவிழ ஓடி, அரசன் அடியில் விழுந்தனர்.

இவ் வலங்கோலத்தைக் கண்ட வேந்தன் வெகுண்டு வெய்துயிர்த்துக் கைபுடைத்து வியர்த்து, "நான் அபயனுக்கு எளியனேயாயினும், அவன் தண்டினுக்கும் எளியனோ" எனக்கூறி

வெடிசிரிப்பாகச் சிரித்தான். "நமது நாடு கானாறும் மலையாறும் கடலாறும் உடையதென்று அத்தண்டு அறிகின்றிலதோ. நன்று, காண்போம்" எனச் செப்பினன். அதுகேட்ட அவனமைச்சன்,

"அரசா சீறுவ
 ரேனு மடியவா
உரைசெ யாந்தொழி
 யாக வுறுதியே.

"ஏனையரசர்களை வெற்றி கொள்ளச் சயதரனுடைய சேனையே போதுமே. அவனும் வருதல் வேண்டுமோ? அவனால் பாண்டிய ரைவருங் கெட்ட கேட்டினை நீ கேட்டிலை போலும். கடலைக் கடந்து அவன் விழிஞம் அழித்ததும், சாலை கைக்கொண்டதும் தனது தண்டுகொண்டன்றோ. முன்னொரு முறை அவன் படையுடனே பொரும்படி எழுந்த படை பட்ட பாட்டை மறந்துவிட்டனையோ? கண்டநாயகரால் காக்கப்பட்ட நவிலைப்பதியில் அவன் பற்றிக்கொண்டது ஆயிரங் களிறு காண். அவனுடைய தண்டினால் தங்களுடைய மண்டலங்களை யிழந்த அரசர் எத்தனை பேரென்று எண்ணியறிய முடியுமா? ஆதலால் இப்பொழுது இத்

தண்டின் முன்னே உன் புயவலி எம்மாத்திரம் என்பதை எண்ணித் துணிக. இப்பொழுது என்னைச் சீறிச் சினந்தாயாகிலும், நாளை அச்சேனையின் எதிரில் நிற்கும்பொழுதாகிலும் என் வார்த்தையை நினைவாய்" என்றெடுத்துச் சொல்லினான்.

அரசன் அது கேட்டு, "அடா மந்திரிப் பைதலே! என் வார்த்தைக் கெதிர்வார்த்தை உரைப்ப தென்றால், தேவர்கள் தானும் என்னெதிரில் வரத் துணியார்கள். நெடுநாளாகப் போர் பெறாமல் என் தோள்கள் தினவு தின்று கொண்டிருப்பதை அறியாய். அரியினை ஆனை முட்டி யெதிர்கிட்டி வருவ துண்மையாயின் அன்றோ, இப்படை என்முன் வரும். இத்தனை நாளாக என்னிடத்திருந்து பழகியும், என்னுடைய தோள்வலியையும் என்னுடைய வாள்வலியையும் யாதும் அறியானாய்ப் பிறன் போன்று பேசினாய். இது நின் பேதைமை. ஒழிக. நமது சதுரங்க சைந்நியமுஞ் சோழன் விடவந்த தண்டின் எதிர்சென்று போர் தொடங்குக" என்றேவினான். கலிங்கப்படை கலித்தெழுந்தது. அடவிகள் பொடிபட்டன. அருவிகள் அனல்பட்டன. அருவரைகள்

துகள்பட்டன. முரசங்கள் மொகுமொகென் றொலித்தன. எள்ளிடுதற்கும் இடைவெளி யின்றி ஒருவர் உடலில் ஒருவர் உடல் புக நெருங்கிச் சென்று, கலிங்கப்படையானது கருணாகரன் படையின் எதிரில் உற்றது.

படை யெடுமெடு மென்ற ஓசையும், படை விடும்விடு மென்ற ஓசையும், இருதிறத்தும் கடலோசை போன்றன. விற்களின் நாண்களைத் தெறிக்கின்ற ஓசை, திசைமுகம் வெடித்தாற் போன்றது. செருவின் இடையிலே அவரவர் தெழித்த தெழிகளானவை, உலகமெல்லாம் செவிடுபடும்படியானவை. இருதிறப் படைக ளும் எதிரெதிராகக் கிடைப்பது கடலொடு கடல் கிடைத்தாற்போன்றது. பரியொடு பரி மலைவது கடலின் அலையோ டலைகள் மலைவது போன்றது. மலையுடன் மலை பொருதாற் போன் றது, யானையுடன் யானை பொருவது. இரதமு மிரதமு மெதிர்ப்பன, முகிலு முகிலு மெதிர்ப் பன போன்றன. படைவீரரொடு படைவீரர் எதிர்ப்பது, புலி புலியொடு எதிர்த்தாற்போலும். அரசரு மரசரும் அடர்ப்பது அரியு மரியும் அடர்த்தாற்போலும். வீரர் கண்களில் சினக்க னல் மினலொளி யெறிந்தன. அவர் கையிற் சிலை

கள் உருமேறுபோல இடித்தன. சிலையினின்றும் கணைமழை பெய்தன. பெய்யவே குருதியாறு கள் பெருகின. அவ்வாறுகளில் அரசர்களு டைய சந்திரவட்டக் குடைகளானவை நுரை கள்போல மிதந்தன. துணிபட்ட யானைக ளின் உடல்கள இருபாலும் அடுக்கியிருப்பது, அவ்வாற்றின் இருகரை போன்றிருந்தது.

எதிரிகள் சிலையிலே அம்மைத் தொடுக்கின்ற அளவிலே, கையில் அம்பில்லாத சில வீரர்கள் தங்கள மார்பிற பாய்ந்த பாணங்களைப் பற்றி யெடுத்துச் சிலையிற் றொடுத்து விடுவர். இரண்டு தொடைகளும் அறுபட்ட சில வீரர்கள், தங் கள் எதிரிலே வருகின்ற யானையின் வலிகெட அதன்மீது ஒரு தொடையைச் சுழற்றி எறிவர்! இனி எறியுமபடி மற்றொரு தொடையை இட்டு வைப்பார். வாரணக் கைகளை வாளால்வெட் டிந தோளிலிட்ட வீரர்சள, தோற்பையைத் தோளிலிட்டு நீர் விடுகின்ற துருத்தியாளரை ஒப்பர். சில வீரர்கள தங்கள மார்பின்மீது பாயவருகின்ற இவுளியை ஈட்டியால் குத்தி யெடுத்தேந்த திரிவது, விசயலக்ஷ்மிக கெடுக்கும் வெற்றிககொடியே போன்றிருக்கும். யானை மத்தகத்தைப் பிளக்கும்போது அதில் நின்றும்

உதிர்கின்ற முத்துகள் அவ்விசயலக்ஷ்மிக்குச் சொரிந்த மங்கலப் பொரியை ஒக்கும்.

இங்ஙனமாக இருதிறப்படைகளும் இளைக்காமல் சமர்செய்யும்போது, கடுகெனவே களப்போரினை முடித்துக் கொள்ளும்படி, கருணாகரன் தன் வேழமுந்தச் சென்றனன். அவன் படையும் முந்தச் சென்றது. அவ்வளவிலே கலிங்கப் படையின் மதயானைகள் துணிபட்டன; குதிரைகளுடனே தேர்கள் முறிந்தன. எங்கும் திமிலகுமில மாயிற்று. ஆயிரம் மதயானை கொண்டுவந்த கலிங்கவீரர்கள் அமரில் எதிர்நிற்க மாட்டாமல் ஒதுங்கினர். அலறி குலறியாய் அச்சங்கொண்டு, இப்படையென்ன மாயையோ மறலியோ ஊழியின் கடையேயோ என்றலறி, மலைமுழைகளில் பதுங்கவும், அரிய பிலன்களில் மறையவும், அடவியில் கரப்பவும் சிதைந்தோடினர்.

வழிவர்சிலர்கடல் பாயவர்வெருவரி
மறைவர்சிலர் வழிதேடுவர்பிலம்
இழிவர்சிலர் சிலர்தூறுமண்டினர்
இருவரொருவழி போகலின்றியே.

ஒருவரொருவரி னோடமுந்தினர்
உடலினிழிவினை யோடவஞ்சினர்
அருவரருவ ரென விறைஞ்சினர்
அபயமபயமென நடுங்கியே.

வேறு.

எழுகலிங்க மொருவன்
அழித்த நாள
ஒரு கலிங்கம்
ஒருவ ருடுத்ததே.

அங்ஙனங் கலிங்கவீரர் சிதைந்தோடி விட்டனராக, அநேக மாதரும் ஆனையும் குதிரையும் தேர்களும் ஒட்டகமும் நவநிதியும் பெண்டிருமென்ற வெல்லாம் அபயன் படைவீரர் கைப்பட்டன. கைக்கொண்ட அவர்களே அவற்றின் அளவைக் கணிப்பது அருமையானால், அவற்றைக் கணிக்குமைப்பார் வேறு எவருளர்.

இவற்றைக் கவர்ந்தபின் கருணாகரன் "இனி கலிங்கத் தரசனையும் கைக்கொண்டு போதல் வேண்டும். அவனிருக்கின்ற இடத்தை அறிதல்வேண்டும்" எனச் சொற்றனன். ஒற்றர்கள் சென்று வரையும் வனமும் துருவித்தேடி, அடிச்சுவடும் பெறாது, இறுதியாக அவனை ஒருமலைக் கவடு பெற்றனம் எனக் கூறுகின்றார்கள். அங்ஙனுற்று அவனைக் கொணரவென்று கருணாகரன் தன் படையைப் போக்கினான். அவர்களும் சென்று, கதிரவன் குடகுவட்டையு மளவிலே, கலிங்க மன்னன் காத்திருந்த வெற்பினை அடை

ந்து வேலாலும் வில்லாலும் வேலிகோலிக் காத்துநின்றனர். பொழுது புலருமுன்னே அவ் வரசனைக் கைப்பற்றித் திரும்பினர்.

திரும்பும் வழியிலே இவர்களை எதிர்ப்பட்ட சில கலிங்கர்கள், தங்கள் உடல் முழுதும் மாசு பூசி, தங்கள் தலைமயிரைப் பறித்தெடுத்து, அரையில் ஆடையைக் களைந்தெறிந்துவிட்டு, "ஐயா நாங்கள் அமணர்கள் கண்டீர், கலிங் கரல்லேம்" எனக் கூறி உயிர்பிழைத்தனர். சிலர் வில்லின் நாணை மடித்து முந்நூலாக்கித் தரித் துக்கொண்டு, "ஐயா நாங்கள் கங்கையில் நீரா டப் போந்தவர்கள்! விதிவலியால் இம்மலைமீது அகப்பட்டுக் கொண்டோம். இந்நாட்டினரல் லோம" எனச்சொல்லி உயிர் உய்ந்துபோயினர். குருதி தோய்ந்த கொடிச்சீலைகளைக் காவிக் கலிங்கமாக உடுத்துக்கொண்டு, தலையினை முண் டிதஞ்செய்துகொண்டு, "ஐயா! எங்கள் உடை யினைக் கண்ட மாத்திரத்தில் எங்களைப் புத்தர்க ளென்று அறிந்துகொள்ளலாம்: நாங்கள் இத்தே யத்தின ரல்லம்" எனக் கூறித் தப்பிப்போயினர் சில கலிங்கர். சிலர் யானைகளின் கழுத்தில் கட்டியிருந்த மணிகளை யவிழ்த்துக் கையிற் பிடித்துக்கொண்டு, "ஐயா நாஙகள் தெலுங்கப்

பாணர்கள்: சேனைகள் மடிகின்ற கலிங்கத்துக் களப்போரினைக் கண்டு திகைத்து நின்றேம்" என்று சொல்லிப் பிழைத்துப்போயினர். இங்ஙனம் பிழைத்துப்போனவர்களும் கலிங்கத்தோவியர்கள் சுவர்களில் எழுதிவைத்த உருவங்களும் தவிரக் கலிங்க நாட்டில் உய்ந்தவர்கள் பிறரில்லை.

கடறகலிங்கமெறிந்து சயததப்பநாட்டிக
 கடகரியுங்குவிதநமுங் கவாநதுசெயவச்
சுடாபபடைவா ளபயனடி யருளிஞேடுஞ்
 சூடினுன வணலடையாசோன தொணடைமானே.

## VI.

இங்ஙனங் கூறிய கூளியானது களத்தையணுகி, காளியை நோக்கி, "இறைவீ! கருணாகரன் வென்ற கலிங்கக் களத்தைக்காண்" என்று சொல்லி மற்ற அலகைக் கணங்களை நோக்கிக் கூறுகின்றது; — "உடலெல்லாம் காயம்பட்டு உதிரஞ்சொரிந்து உதிரவெள்ளத்திலே பதைத்துச் செல்லும் யானையானது, கடலின்மீது மரக்கலஞ் செல்லுமாறு போலச் செல்வதைக் காண்மின்.

விருந்தினரும் வறியவரு நெருங்கி யுண்ண
 மேனமேலு முகமலரு மேலோர்போலப
பருந்தினமுங கழுகினமுந் தாமே யுணணப்
 பதுமமுக மலாநதாரைப் பாரமின பாரமினை.

சாமளவும் பிறர்க்குதவா தவரை நச்சித்
தள்ளுநாபோல் வீரருடல் தரிககுமாவி
போமளவும் அவரருகே இருநது விட்டுப்
போகாத நரிககுலததின புகழ்சசி காணமின்.

இறந்துபட்ட என் கணவன் எங்கே எங்கே என்று தேடித்திரிகின்ற பெண்டிரைக் காண்மின். களத்திற் பட்ட கணவர் வீரசுவர்க்கம் எய்து முன்னரே தாமும் அவரைச் சென்று கூட விரும்பும் பெண்டிர் தமது ஆவி விடுவாரைக் காண்மின்.

வெயிற்றுரை வேல் சூழவுங் தைக்க பண்மேல்
விழாவீரா வேழமபாதம்
கயிறறு விழுபபுண்டு சாயாது நிறகுங
கழாயொததல காண்மினசளோ.

அமர்செய்த கலிங்கர் தமது கவரி வெள்ளிய நுரையாகவும், அவருடலினின்றும் ஒழுகிய குருதி கடலாகவும், அக்கடலில் கரியின் மதம் கழியாகப் பாய்வதுங் காண்மின்.

புவிபுரந் தருளசெயுஞ் சயதரன் ஒருமுறைப்
புணரிமே லணைபடப பொருவிலவிற குணிதலிற்
கவிகுலங் கடலினடைச சொரிபெருங் கிரியெனக்
கரிகளின பிணமிதிற் காணமினோ காண்மினோ.

இங்ஙனமாக இக்களமடையக் காட்டி முடியாது. இனி நீங்கள் இக்குருதியாற்றிற் குளித்

தெழுந்து கூழ் அடுங்கள்.” அது கேட்டலும் மடைப்பேய்கள் களக்கூழ் அடுதற்பொருட்டாகச் சென்றன.

அடீ குறுமோடீ! கூரெயிறி நீலீ! மறிமாடீ! குதிர்வயிறீ! எல்லாரும் விரைந்துவாரீர், கூழடுவோம். ஒடிந்த ஆனைத்தந்தக்கொம்பினால் பல்லை விளக்கிக் கொள்ளுங்கள். குருதியாகிய மடுவிலே இறங்கி நீராடுங்கள். களத்திற்பட்ட கலிங்கரது நிணக்கலிங்கங்களை விரித்து விரித்து உடுத்துக்கொள்ளுங்கள். ஆனை மத்தகத்தால் தரையை மெழுகி, இங்கே பொரிந்து உதிர்ந்து கிடக்கின்ற முத்தாப் பொடிகளாற் கோலமிட்டு, ஆனைமத்தகங்களை அடுப்புக்கட்டியாக வைத்து, குடருங் காலுந் தலையு மற்ற ஆனையாகிய பானையை அடுப்பின்மேல் வைத்து, குதிரையின் குருதியை உலைநீராகச் சொரியுங்கள். வீரரது முனிவென்னுங் கனலை மூட்டுங்கள். குந்தம்—பகழி—கோல்—வேல் என்னும் இந்தனமெடுத்து இடைமடுத் தெரியுங்கள். களத்தில் மடிந்த கலிங்கருடைய பல்லைத் தகர்த்தெடுத்து பழவரிசியாகக்கொண்டு முரசங்களாகிய உரலிலிட்டுத் தந்த உலக்கையால் சலுக்கு மெலுக்கென ஓங்கிக் குத்துங்கள்.

மணந்தரு ராச சயதுங்கன
எங்கோன் விடுத்த வாள்வலியால்
கணங்க டழைக்கக் கலிங்கசழியப்
பொருத களிறதைப் பாடீரே.

மன்னர் புரந்தர வாளபயன
வாரண மிங்கு மதம்படவே
தென்ன ருடைந்தமை பாடீரே
சேர ருடைந்தமை பாடீரே.

எற்றைப் பகலும் வெள்ளணிநா
ணிருநிலப் பாவைதன் கிணிமுறுவங்
கொற்றக் குடையைப் பாடீரே
குலோத்துங்கச் சோழனைப் பாடீரே.

காட்டியவேழ வணிவாரி
கலிங்கப் பரணி நங்காவலனமேல
சூட்டிய தோனறலைப் பாடீரே
தொண்டையர் வேந்தனைப் பாடீரே.

குத்தியெடுத்த அரிசியைச் சல்லவட்டமென்னும் முறத்திலிட்டுத் தவிடுபோகப் புடைத்தெடுத்துக் கலிங்க ரணிந்திருந்த தூணிகளை நாழியாகக் கொண்டளந்து உலையிலிடுங்கள். கையைத் துடுப்பாகவும் குதிரைக்குளம்பை அகப்பைகளாகவும் கொள்ளுங்கள். கொண்டு கூழட்டு இறக்கிவையுங்கள். யானைக்கும்பங்களைக் கொண்டுபோய்க் குருதியாற்றிலே தண்ணீர் முகந்தெடுத்துவந்து குளிரவைத்துக்கொள்

ளுங்கள். கலிங்கருடைய பொற்பரிசைகளை
யும் தவளக்குடைகளையும் உண்கலமாக அமை
த்துக்கொள்ளுங்கள். மண்டலிகர் கேடகங்க
ளைச் சின்னமாகப் பரப்புங்கள். எல்லாம் வரி
சையுடனே பந்தி பந்தியாக உட்கார்ந்து உண்
ணுவோம் வாரீர் கூழை வாரீர்.

முன்னே மணலூரிலே பாணிக்கூழ் படைத்
துப் பயின்ற மடைப்பேய்களே பந்திதோறும்
வாரீர். அடிக்கடி பவதீ பிக்ஷாநதேகியெனும்
இந்தப் பவநப்பேய்க்குக் கூழ் வாரீர். உயிர்க்
கொலை செய்வதின்றி ஒருபொழு துண்பனவா
கிய இந்தச் சமணப்பேய்களுக்கு மயிரை நீக்கி
மாமிசத்தை வடித்த கூழை வாரீர். தோள்
முழுதும் போர்த்துக்கொண்டிருக்கும் இந்தப்
புத்தப்பேய்க்கு மூளைக்கூழைக் கழுத்துவரை
யில் நிறைந்து நாக்குமுறும்படி மணம்நீங்காத
கஞ்சியாக வாரீர். இந்தக் குருட்டுப்பேய்க்கும்
ஊமைப்பேய்க்கும் கைநிறையக் கூழை வாரீர்.

துதிக்கைத் துண்டைப் பல்லின்மேல் செம்
மையாக நிறுத்திக்கொண்டு இந்தத் துதிக்கை
யின் நுதிக்கே கூழை வாரென்று கூவும் இந்த
நோக்கப்பேய்க்குக் கூழை வாரீர். தன் கண

வன் குடியானென்று கூறித் தானே குடிக்கு மிந்தக் கூத்திப்பேய்க்கும் கூழை வாரீர். பாணிக்களங் காணவந்த விருந்துப் பேய்களை முன்னே உண்பித்துப் பின்னே நமது ஊர்க் கண்ணிருக்கும் பேய்களுக்குக் கூழை வாரீர். இன்றைக்குக் களப்பாலி உண்டென்று நென்னலிரவில் கனவுகண்ட பேயினுக்கு இன்றைக்கன்றி நாளைக்கும் ஆவதாகச் சிறிது கூழைக் குதிரைத் தோற்பட்டையிற் பொதிந்து வையீர். இணக்கமில்லாத நம்மையெல்லாம் சரியாகக் கணக்கெண்ணிவைத்திருக்கும் இந்தக் கணக்கப்பேய் மனங்களிக்கக் கையாலெடுத்துக் கூழை வாரீர். எல்லீரும் மென்சுடர் வெள்ளையைக் குதட்டுங்கள்; மெல்விரலை யதுக்குங்கள்; முன்கை யெலும்பை மெல்லுங்கள்; மூளையை வாரி விழுங்குங்கள்.

ஓடி யுடல்வியர்த்த துணணீரே
உநதி பறநதிளைத துண்ணீரே
ஆடி யசைநதசைந துணணீரே
அறற தறவறிந் துணணீரே.

குதிரைக்காதாகிற வெற்றிலைச் சுருளும் பாட்டின் பிளவாகிற பாக்கும் கலிங்கர் கண்மணியாகிற சுண்ணும்புங் கலந்து தம்பலந் தின்னீர்.

இங்ஙனம் உண்டுகளித்து ஏப்பமிட்டுப் பின் நட்டமிட்டன.

வாசி கிடக்கக் கலிங்கரோட
மாநத னேவிய சேனைவீரர்
தூசியெடுத்தமை பாடிநின்று
தூசியு மிட்டுநின் றாடினவே.

அபயனருளினைப் பாடின. அவன் அணிசெறி தோளினை வாழ்த்தின.

பொன்னித் துறைவனை வாழ்த்தினவே
பொருநைக்கணைவனை வாழ்த்தினவே
கன்னிக்கொழுநனை வாழ்த்தினவே
கங்கைமணாளனை வாழ்த்தினவே.

பூப்பதுமத்தவன் படைத்தவை சத்த
புவியை இரண்டாவதும் படைத்துக்
காப்பது பொன்சட னென்றுகாத்த
கரிகாலச்சோழனை வாழ்த்தினவே.

S. P. C. K. PRESS, VEPERY, MADRAS— 1915.

PUBLICATIONS BY

## T. Chelvakesavaroya Mudaliar, M.A.

*Perambore, Madras, N.*

| | | RS. | A. |
|---|---|---|---|
| 1. | Essay on Tamil | ... 1 | 0 |
| 2. | Essay on Kambanadar | ... 0 | 8 |
| 3. | Essay on Tiruvalluvar | ... 0 | 8 |
| 4. | Tamil Essays | ... 0 | 4 |
| 5. | Simple Essays in Tamil | ... 0 | 4 |
| 6. | Akbar | ... 0 | 10 |
| 7. | Aranericharam | ... 0 | 4 |
| 8. | Manual of Tamil Grammar.. | 0 | 4 |
| 9. | Tamil Novelettes | ... 0 | 6 |
| 10. | Kalingathupparani. A resume in prose | ... 0 | 8 |
| 11. | Kannakicharitram | ... 0 | 8 |